7th November 1966]

இம் மழையினால் விளை பயிர்களுக்குச் சேதம் ஏதுவும் ஏற்படவில்லை

(5) **திருநெல்வேலி.**—1965-ம் ஆண்டில் அக்டோபர் இறுதி வாரத்தில் தொடங்கிய வடகிழக்குப் பருவ மழை 1965 டிசம்பரிலும் தொடர்ந்து பெய்தது. ஏறக்குறைய மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்ததனால் மணிமுத்தாறு, பாபநாசம் ஆகிய இரு நீர்த்தேக்கங்களிலும் நீர் நிறைந்தது. 1965-ம் ஆண்டு அக்டோபர் இறுதியில் தாம்பிரபரணித் திட்டத்தின்கீழ் பாசனம் வேளாண்மைப் பணிகள் தொடங்கப்பட்டன. 1965-ம் ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் நடவு வேலைகள் முடிவடைந்துவிட்டன. தாம்பிர பரணித் திட்டம், மணிமுத்தாறு முக்கிய கால்வாய்த் திட்டம் இவற்றின் கீழுள்ள ஏரி, குளங்கள் போதுமான நீரைப் பெற்றன. தாம்பிரபரணி, மணிமுத்தாறு திட்டங்களின் பயிர் விளைவிக்கக்கூடிய எல்லாப் பகுதிகளிலும் பயிர் விளைவிக்கப்பட்டது. நீர்த் தேக்கங்களில் போதுமான நீர் இருப்பில் இருந்தது. எனவே நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கை உறுதிப்பட்டது. தாம்பிரபரணித் திட்டத்தின்கீழ் வராத பகுதிகள் சித்தாறு, கடானா, பச்சையாறு இவற்றின் மூலம் நீர் பெறும் ஏரி, குளங்கள், மானம் பார்த்த ஏரிகள் இவைகளுக்கும் போதிய அளவு தண்ணீர் கிடைத்தது. கிழக்குக் கடற்கரையோரத்தில் உள்ள கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், நாங்குநேரி தாலூகாக் களில் உள்ள விளை பயிர்கள் நல்ல நிலைமையிலேயே இருந்தன. செங்கோட்டை, தென்காசி, சங்கரன்கோவில் தாலூகாக்களின் சில இடங் களில் கதிர்கள் முற்ற மேற்கொண்டும் மழை தேவைப்பட்டது. திருச் செந்தூர் தாலூகாவைச் சேர்ந்த சாத்தான்குளம் துணை தாலூகாவிலுள்ள புத்தன்தருவை, சாஸ்தாவினல்லூர் முதலிய கிராமங்களில் 177·94 ஏக்கரில் விளைந்து வந்த பயிர்கள் மழை காரணமாக ஏரியில் உடைப்பு ஏற்பட்டதால் சேதமடைந்தன. உற்பத்தி இழப்பு 1,88,300 ரூபாய் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(6) **கன்னியாகுமரி மாவட்டம்.**—இம் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை காலங்கடந்து பெய்தது. ஆயினும் இம் மாவட்டத்தில் உள்ள இரு நீர்த்தேக்கங்கள், பல பாசன ஏரி, குளங்கள் இம் மழையினால் நீர் பெற்றன. விளைச்சலும் கண்டு முதலும் திருப்திகரமாக இருந்தன. இப் பருவ மழையால் பயிர்களுக்குச் சேதம் ஏதுவும் ஏற்படவில்லை.

APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 402 at page 415]

The taluks in the State which were seriously affected by drought conditions in Fasli 1375 are as follows :—

Dharmapuri district—

(1) Hosur taluk.

(2) Veppanapalli Panchayat Union Area in Krishnagiri taluk.

The Nilgiris district—

(1) Ootacamund taluk.

(2) Coonoor taluk.

Thanjavur district—

All the taluks.

Ramanathapuram district—

(1) Srivilliputhur taluk.

(2) Rajapalayam sub-taluk.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Tirunelveli district—

(1) Sankarankoil taluk.

(2) Tenkasi taluk.

(3) Shencottah taluk.

(4) Koilpatti taluk.

The Government have sanctioned relief measures in the above taluks as indicated below :—

Hosur taluk and Veppanapalli Block in Krishnagiri taluk, Dharmapuri district—

(1) The collection of Land Revenue and loan instalments has been postponed to Fasli 1376.

(2) An amount of Rs. 5 lakhs has been sanctioned for taking up minor irrigation works and road works with a view to providing labour to rural population.

(3) Remission of Land Revenue for wet lands under B.S.O. 13 has been granted.

(4) The Collector has been permitted to grant Takkavi loans for fodder to ryots though the areas are covered by Full Finance Scheme.

(5) A sum of Rs. 1 lakh has been sanctioned for providing 100 drinking water wells in Harijan colonies in the district.

Ootacamund taluk and Coonoor taluk, the Nilgiris district—

(1) The Government have ordered that no coercive steps should be taken to recover the loan dues relating to Fasli 1373 to 1375.

(2) The Government have sanctioned an advance of Rs. 15 lakhs to the Nilgiris District Co-operative Credit Bank to enable it to postpone the loan amount due to Co-operative Societies from the potato growers.

All taluks in Thanjavur district—

(1) Normal seasonal remission under B.S.Os. has been granted to cover any loss sustained by the ryots on account of crop failure.

(2) The Government have ordered that no water rate need be charged in the Thirvai Jasthi areas where on account of crop failure in the Thaladi season due to insufficient water supplies, dry crops requiring occasional irrigation like groundnut and gingelly have been raised.

(3) Registered double crop wet lands—

(*a*) where the yield is four annas and less.	Full remission of second crop charge.
(*b*) where the yield is above four annas (and six annas or below) but does not exceed six annas.	Remission of one-fourth of the second crop charge.

7th November 1966]

(4) **Registered single crop wet lands—**

(*a*) where the yield is four annas and less.	Full remission of water-rate or fasli jasthi.
(*b*) where the yield is above four annas (and six annas or below) but does not exceed six annas.	Remission of one-fourth of the water-rate or fasli jasthi.

(5) **Registered dry lands—**

(*a*) where the yield is four annas and less.	Full remission of water-rate.
(*b*) where the yield is above four annas (and six annas or below) but does not exceed six annas.	Remission of one-fourth of the water-rate.

Srivilliputhur taluk and Rajapalayam sub-taluk in Ramanathapuram district—

(1) Seasonal remission under B.S.O. has been granted.

(2) Sanction has been accorded to an expenditure of Rs. 1 lakh for deepening drinking water wells.

(3) Sanction has been accorded to incur an expenditure not exceeding Rs. 2 lakhs for starting road works and tank works with a view to providing employment to the agricultural labourers.

(4) Permitted to grant Takkavi loans for deepening irrigation wells even in areas covered by the Full Finance Schemes during 1966–67.

(5) Coercive process should not be resorted to for collection of loan instalments.

Sankarankoil taluk, Tirunelveli district—

(1) Grant of remission under Board's Standing Order has been sanctioned.

(2) Sanction has been accorded for an expenditure of Rs. 3,00,000 for disbursement of loans under Takkavi Rules for deepening irrigation wells.

(3) Sanction has been accorded to an expenditure of Rs. 1,00,000 for deepening drinking water wells.

(4) The Government have directed that go-slow policy be adopted avoiding coercive steps in the collection of loan instalments in the three firkas of Sankarankoil, Vasudevanallur and Tiruvengadam in Sankarankoil taluk.

[7th November 1966

Tenkasi and Shencottah taluks, Tirunelveli district —

(i) Remission of full wet assessment for wet crops where the yield has been less than 25 paise in Tenkasi taluk has been granted.

(ii) Sanction has been accorded to an expenditure of Rs. 2,00,000 for repairing Minor Irrigation Sources and Rs. 1,00,000 for road works with a view to alleviating the distress among the rural population.

(iii) The Government have directed that a go-slow policy be adopted avoiding coercive steps in the collection of loan instalments in Tenkasi and Shencottah taluks.

(iv) Sanction has been accorded to an expenditure of Rs. 2,00,000 in addition to the existing allotment for the maintenance of Public Works Irrigation sources in Tenkasi and Shencottah taluks.

Koilpatti taluk, Tirunelveli district—

The Government have directed that a go-slow policy be adopted avoiding coercive steps in the collection of loan instalments.

பதில்.— 1375-ம் பசலியில் வறட்சி நிலைமைகள் காரணமாக இம் மாநிலத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வட்டங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.—

தர்மபுரி மாவட்டம் :

(1) ஹோசூர் வட்டம்.

(2) கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள வேப்பனபல்லி பஞ்சாயத்து யூனியன் பகுதி.

நீலகிரி மாவட்டம் :

(1) உதகமண்டலம் வட்டம்.

(2) கூடலூர் வட்டம்.

தஞ்சாவூர் மாவட்டம் :

எல்லா வட்டங்களும்.

இராமநாதபுரம் மாவட்டம் :

(1) ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டம்.

(2) ராஜபாளையம் துணை வட்டம்.

திருநெல்வேலி மாவட்டம் :

(1) சங்கரன் கோயில் வட்டம்.

(2) தென்காசி வட்டம்,

(3) செங்கோட்டை வட்டம்.

(4) கோவில்பட்டி வட்டம்.

மேற்சொன்ன வட்டங்களில் கீழே கண்டுள்ளவாறு இடர் தீர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசாங்கம் அனுமதித்துள்ளது.

7th November 1966]

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஹோசூர் வட்டமும், கிருஷ்ணகிரி வட்டத்தின் வேப்பனபல்லி வட்டாரமும் :—

(1) நில வரியையும் கடன் தவணைகளையும் வசூல் செய்வது 1376-ம் பசலிக்கு ஒத்தி போடப்பட்டுள்ளது.

(2) கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சிறு பாசன வேலைகளையும், சாலை வேலைகளையும், மேற்கொள்வதற்கென ரூ. 5 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(3) வருவாய்த்துறை வாரிய நிலை ஆணை 13-ன் கீழ் நன்செய் நிலங்களுக்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(4) இப்பகுதிகள் முழு நிதித்திட்டத்தின் கீழ் வந்திருப்பினும் குடியானவர்கள் தீவனம் வாங்க தக்காவிக் கடன்கள் வழங்குவதற்குக் கலெக்டருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(5) இம்மாவட்டத்தில் ஹரிஜனங்களுக்கு 100 குடிநீர்க் கிணறுகளை அமைத்துக் கொடுக்க ரூ. 1 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் வட்டமும் கூடலூர் வட்டமும் :—

(1) 1373 முதல் 1375 வரையுள்ள பசலிகள் சம்மந்தப்பட்ட கடன் நிலுவைகளை வசூலிக்க வலுக்கட்டாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என்று அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

(2) உருளைக்கிழங்கு பயிரிடுபவர்களிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலுவையாக உள்ள கடன் வசூலை ஒத்தி போடுவது வசதியாக இருக்கும் பொருட்டு நீலகிரி மாவட்டக் கூட்டுறவுக் கடன் பாங்குக்கு ரூ. 15 லட்சம் முன் பணம் வழங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள எல்லா வட்டங்களும் :—

(1) பயிர் சாவியடைந்ததன் காரணமாக குடியானவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைச் சரிக்கட்ட போர்டு நிலை ஆணையின் கீழ் இயல்பான பருவக்காலத்தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(2) எந்தத் தீர்வை ஜாஸ்திப்பகுதிகளில் போதிய தண்ணீர் கிடைக்காத காரணத்தால் தாளடிப் பருவப்பயிர் விளையாமற்போய் ஒரொரு பொழுது பாசனம் தேவைப்படுகிற புன்செய்ப் பயிர்கள் (வேர்கடலை, எள் போன்ற பயிர்கள்) பயிரிடப்பட்டனவோ, அந்தப் பகுதிகளில் தண்ணீர்த் தீர்வை எதுவும் விதித்து வாங்கப்படக் கூடாது என்று அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

(3) பதிவான இருபோக நன்செய் நிலங்கள் :—

(*a*)	நான்கணு விளைச்சல் அல்லது நான்கணுவுக்குக் குறைவான விளைச்சல்.	இரண்டாம் போகப் பயிர் வரி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
(*b*)	நான்கணுவுக்கு மேற்பட்டு (ஆறணுவுக்கு அல்லது அதற்குக் குறைவாக) ஆனால் ஆறணுவுக்கு மேற்படாமல் விளைச்சல்.	இரண்டாம் போகப் பயிர் வரியில் கால் பாகம் தள்ளுபடி செய்யப்பட்டது.

(4) பதிவான ஒரு போக நன்செய் நிலங்கள் :—

(*a*)	நான்கணு விளைச்சல் அல்லது நான்கணுவுக்குக் குறைவான விளைச்சல்.	தண்ணீர் தீர்வை அல்லது பசலி ஜாஸ்தி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டது.
(b)	நான்கணுவுக்கு மேற்பட்டு (ஆறணுவுக்கு அல்லது அதற்குக் குறைவாக) ஆனால் ஆறணுவுக்கு மேற்படாமல் விளைச்சல்.	தண்ணீர்த் தீர்வை அல்லது பசலி ஜாஸ்தியில் கால் பகுதி தள்ளுபடி செய்யப்பட்டது.

[7th November 1966

(5) பதிவான புன்செய் நிலங்கள் :—

(a) நான்கணா விளைச்சல் அல்லது நான்கணாவுக்கு குறைவான விளைச்சல்.	தண்ணீர்த் தீர்வை முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டது.
(b) நான்கணாவுக்கு மேற்பட்டு (ஆறணாவுக்கு அல்லது அதற்குக் குறைவாக) ஆனால் ஆறணாவுக்கு மேற்படாமல் விளைச்சல்.	தண்ணீர்த் தீர்வையில் கால் பகுதி தள்ளுபடி செய்யப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டமும் ராஜபாளையம் துணை வட்டமும் :—

(1) போர்டு நிலை ஆணையின்கீழ் பருவகாலத் தள்ளுபடி வழங்கப் பட்டுள்ளது.

(2) குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ஆகும் செலவிற் கென ரூ. 1 லட்சத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(3) வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிப்பதற்காக சாலை வேலைகளையும் ஏரி வேலைகளையும் தொடங்கும் பொருட்டு ரூ. 2 லட்சத்துக்கு மேற்படாத செலவிற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

(4) முழு நிதித் திட்டத்தின்கீழ் உள்ள பகுதிகளில்கூட பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக 1966–67-ல் தக்காவிக் கடன்கள் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(5) கடன் தவணைகளை வசூலிப்பதற்காக வலுக்கட்டாய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படக்கூடாது என்று ஆணையிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டம் :—

(1) போர்டு நிலை ஆணையின்கீழ் தள்ளுபடி வழங்குவது அனுமதிக்கப் பட்டுள்ளது.

(2) பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கென தக்காவிக் கடன் விதிகளின் கீழ்க் கடன்கள் வழங்க ரூ. 3,00,000 செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(3) குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கென ரூ. 1 லட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(4) சங்கரன்கோயில் வட்டத்தில் உள்ள சங்கரன்கோயில், வாசுதேவ நல்லூர், திருவேங்கடம் ஆகிய மூன்று பிர்க்காக்களில் கடன் தவணைகளை வசூலிக்க வலுக்கட்டாய நடவடிக்கைகளைத் தவிர்த்து, தவணைகளை நிதான மாக வசூலிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, செங்கோட்டை வட்டங்கள் :—

(1) தென்காசி வட்டத்தில் 25 காசுக்குக் குறைவான விளைச்சல் உள்ள நன்செய் பயிர்களுக்கு நன்செய் வரி முழுவதும் தள்ளுபடி செய்யப் பட்டது.

(2) கிராம வாசிகளின் இன்னல்களைப் போக்கும் நோக்கத்துடன் சிறு பாசன வேலைகளைச் செப்பனிட ரூ. 2 லட்சமும், சாலை வேலைகளுக்காக ரூ. 1 லட்சமும் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(3) தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் கடன் தவணைகளை வசூலிப்பதில் வலுக்கட்டாய நடவடிக்கைகளைத் தவிர்த்து வசூலில் நிதானம் காட்டவேண்டும் என்று அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

(4) தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் பொதுப் பணித்துறைப் பாசன ஆதாரங்களைப் பேணி வருவதற்காக தற்போதுள்ள நிதி ஒதுக்கத் திற்குக் கூடுதலாக ரூ. 2 லட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

7th November 1966]

திருநெல்வேலி மாவட்டம், கோயில்பட்டி வட்டம் :—

கடன் தவணைகளை வசூலிப்பதில் வலுக்கட்டாய நடவடிக்கைகளைத் தவிர்த்து வசூலில் நிதானம் காட்டவேண்டும் என்று அரசாங்கம் ஆணை யிட்டுள்ளது.

Appendix III.

[*Vide* Answer to Starred Question No. 403 at page 416.]

(*a*) Yes.

(*b*) The details of remission to be granted are as follows :—

Name of district. (1)	Name of taluk. (2)	Amount of remission to be granted. (3)
		RS.
1 Thanjavur ..	(1) Pattukottai	1,12,487
	(2) Arantangi	6,532
	(3) Mannargudi	33,614
	(4) Thiruthuraipoondi ..	8,854
	(5) Nagapattinam ..	1,184
	(6) Nannilam	2,592
	(7) Thanjavur	80,599
	(8) Orathanad	13,369
	(9) Mayuram	75,420
	(10) Sirkali	60,250
	(11) Papanasam	20,085
	(12) Kumbakonam ..	1,06,400
	Total	5,21,386
2 Tiruchirappalli ..	(1) Karur	3,283
	(2) Musiri	611
	(3) Tiruchirappalli ..	1,107
	Total ..	5,001
3 Tirunelveli ..	(1) Tenkasi	90,305
	(2) Sankarankoil ..	75,176
	(3) Tirunelveli ..	25,153
	(4) Ambasamudram ..	5,782
	(5) Koilpattti ..	1,212
	Total ..	1,97,628